# DEPOSTITION OF WITNESS

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, NAGERCOIL

## O.S. No. 92 of 2011

**வா.சா.3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரதாப்சிங் |
| தந்தை பெயர் | : | சுவமிநாதன் |
| கிராமம் | : | வடிவீஸ்வரம் தெற்கு |
| வட்டம் | : | அகஸ்தீஸ்வரம் |
| தொழில் | : | முதுநிலை வரைவாளர் |
| வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 03.02.2025

**முதல் விசாரணை** :-

இந்த நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வந்த அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் எதுவும் எங்கள் அலுவலகத்தில் கிடையாது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட இரண்டாவது ஆவணம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருக்கும் 1வது மற்றும் 3 வது தமிழ்நாடு ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி அலுவலகம் சென்னையில் இருக்கும்.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**1 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு வந்த அழைப்பாணையில் என்னென்ன ஆவணங்கள் கொண்டு வர வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பழைய ஏ ரெஜிஸ்டர், பழைய புலபட சுவடி, செற்றில்மெண்ட் ரெஜிஸ்டர்.

2 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படும் வரைபடம் ரீ சர்வே வரைபடம் அகஸ்தீஸ்வரம் வட்டம் தெங்கம்புதூர் கிராம புதிய புல எண் 261 க்கான கணிணி நகல் என்றால் சரிதான். **மேற்படி வரைபடத்தை சாட்சி ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி வரைபடம் பி.வா.சா.ஆ.1 ஆக 2 வது பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 புல எண். 261/1 ம் 261/6 ம் வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளது என்றால் சரிதான். புல எண். 261/1 ம் 261/6 க்கும் இடையில் 3 பிளாட்டுகள் உள்ளது என்றால் 5 பிளாட்டுகள் உள்ளது. புல எண். 261/1 ம் 261/6 ம் ஒன்றை ஒன்று தொட்டு கிடையாது என்றால் சரிதான்.

**2 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**